**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 99/2022**

**Dated: 06.05.2026**

**Deposition of Witnesses for PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.மகாலிங்கம்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1** வது எதிரி இறந்து விட்டார்**, 2** வது ஆஜர் இல்லை**,** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. 3** வது **எதிரி ஆஜா** படுத்தப்பட்டார்**. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.09.2021 ம் தேதி இளையான்குடி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது காலை 10.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் பாலமுருகன் அவர்களும் நானும், காவலர்கள் மலையரசன், சுந்தர், முனியசாமி ஆகியோர் கஞ்சா சம்பந்தமாக தனிப்படை அமைத்து சார்பு ஆய்வாளர் பாலமுருகனுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி இளையான்குடி புறவழிசாலையில் ைஹப்ரோ ஜவுளிக்கடை பின்புறம் உள்ள GSC city block அருகில் காலை 10.30 மணிக்குசென்ற போது அங்கு நின்று

கொண்டிருந்த 3 நபர்களை பிடிக்க சென்ற போது 2 பேரை பிடித்தோம். ஒருவர் அங்கிருந்து ஒடி விட்டார். பிடிபட்ட 2 நபர்களை பிடித்து பேர் விலாசம் கேட்க அதில் ஒருவர் மாற்றுத்திறனாளி, அவர் 3 சக்கர வாகனத்தில் அமர்ந்திருந்தார். அவர் பெயர் முகமது இப்ராகிம் த/பெ காஜாமைதீன், 2வது நபர் பெயர் மர்சூக்அலி என்று தெரிவித்தார்கள். தப்பி சென்றவரை பற்றி விசாரிக்க அவர் பெயர் ராஜா த/பெ சின்னாள் இளையான்குடி என தெரிவித்தார். நாங்கள் கொண்டு சென்ற தராசில் முகமது இப்ராகிம் வைத்திருந்த பையில் கஞ்சா இருப்பதாக தகவலின் பேரில் அந்த பையை சோதனை செய்ய நீதித்துறை நடுவரிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனை செய்ய தங்களுக்கு உரிமை உள்ளது என்று கேட்டதற்கு நாங்களே சோதனை செய்யலாம் என சம்மதம் தெரிவித்தன் பேரில் சோதனை சம்மத கடிதம் கொடுத்து எதிரியிடம் கையொப்பம் பெற்று முகமது இப்ராகிம் வைத்திருந்த பையை சோதனை செய்த போது 1.100 kg கஞ்சா இருந்தது. மர்சூக்அலி என்பரிடம் கஞ்சா விற்ற பணம் 2680 ரூபாய் பணம் இருந்தது. எந்த வித அரசு அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த காரணம் சொல்லி எதிரிகளை 11.00 மணிக்கு கைது செய்தோம். 11.30 மணிக்கு மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் சார்பு ஆய்வாளர் பாலமுருகன் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். 12.00 மணிக்கு கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து பகுப்பாய்விற்காக தலா 50கிராம் 2 மாதிரிகள் எடுத்து காக்கி பேப்பரில் ் மடித்து கட்டி சீல் வைத்தும், கஞ்சா சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார். அதில் சாட்சிகளாக மலையரசன் மற்றும் முனியசாமியும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். 12.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் எதிரி மர்சூக்அலி என்பரிடம் கஞ்சா விற்ற பணம் 2680 ஐ சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார்.

அதில் சாட்சிகளாக மலையரசன் மற்றும் முனியசாமியும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். வாகனம் TN63BA6418 yamaka இரு சக்கர வாகனம், TN63BE1903 மூன்று சக்கர வாகனம் 13.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினார். 13.30 மணிக்கு எதிரி மற்றும் தடய சொத்துகளுடன் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் தனிஅறிக்கையுடன் மேல் நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்க உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என்னை ஆய்வாளர் 02.09.2021 ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார். அந்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். 3வது எதிரி தப்பி ஓடி விட்டதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தப்பி ஓடிவிட்டார் என்று சொல்லியுள்ளேன். அது என்னுடைய வாக்குமூலத்தில் 16வது வரியில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு எனது வாக்குமூலத்தில் 3ம் எதிரி தப்பி ஓடி விட்டார் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் அன்றைய தினம் நாங்கள் எந்த வாகனத்தில் விசாரணைக்கு சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் GSC city ப்ளாட் எத்தனை பிளாட்கள் இருந்தது என்று கேட்டால் அது பற்றி எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. நாங்கள் எதிரிகளை எந்த இடத்தில் குறிப்பிட்டு எதிரிகளை பிடித்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி, சோதனை சம்மத

கடிதம், ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதா இல்லை கையால் எழுதப்பட்டதா என்றால் அத்தாட்சி கையால் எழுதப்பட்டது, ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது மடிக்கணினி கொண்ட சென்றதாகவும், ஆவணங்களை யார் கணிணியில் தட்டச்சு செய்தார்கள் என்று விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களை எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை. கஞ்சா வைத்திருந்ததாக சொல்லப்படும் பையினை சார்பு ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் கைப்பற்றினார். அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார். அது என்ன வகை பை என்று என்னுடைய ஆய்வாளர் விசாரணை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 3 வது எதிரி தப்பி ஓடி விட்டதாக இந்த அத்தாட்சி, சோதனை கடித சம்மதம் ஆகியவற்றில் 3 நபர்கள் உள்ளதாகவும், ராஜா என்பவர் தப்பி ஓடியதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணங்களையும் கையொப்பம் செய்யவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் தாயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் எந்த ஆவணத்தில் உங்களது பெயர் இருந்ததா என்றால் ஆவணங்களில் எனது பெயர் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சார்பு ஆய்வாளருக்கு தகவல் கிடைத்ததாக சொல்வது பொய் என்றும் அதன் பேரில் சார்பு ஆய்வாளர் ரெய்டுக்கு செல்வதாக சொல்வது பொய் என்றும் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளை பார்த்ததாகவும், எதிரிகளிடமிருந்து கஞ்சா மற்றும் பணம் கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

பணத்தின் Denomination ஆவணங்களில் சொல்லப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாத காரணத்தினால் தான் எந்த ஆவணங்களிலும் எனது பெயர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மேலதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3வது எதிரி ராஜா சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடியதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. உண்மையை மறைத்து பொய் சாட்சியம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.